Deposition of Witness for : PW-1 Date : 14/12/2023

Case No. : O.S. 118/2020 Nationality : Indian

Name : சாந்தி Religion :

Father's/Husband's Name : மேகராஜன் Age :59

Village :

Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கு எனது தாயார் சரோஜா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு எனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நான் இந்த வழக்கில் ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் ரங்கநாதன். அவர் தற்போது உயிருடன் இல்லை. ரங்கநாதனுக்கு எனது அம்மா மற்றும் என்னையும் சேர்த்து மூன்று பெண்கள் வாரிசுகள் என்றால் சரிதான். எனது அக்கா மல்லிகா பந்தநல்லூரில் வசித்து வருகிறார். நானும் பந்தநல்லூரில் தான் வசித்து வருகிறேன். எனது தங்கை ஜெயலட்சுமியும் பந்தநல்லூரில் தான் வசித்து வருகிறார். எனது கணவர் வெளிநாட்டில் உள்ளார். எனது குழந்தைகளும் பந்தநல்லூரில் தான் இருக்கிறார்கள்.

2. எனக்கு பொது அதிகாரம் வழங்கப்பட்டபோது தாக்கல் செய்த மனுவில் என்ன முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் நான் எனது குழந்தைகளுடன் வசித்து வரும் மகாராஜபுரம் முகவரி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பந்தநல்லூரில் வசித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவ்வப்போது பந்தநல்லூரில் வசித்து வருவேன். நான் நிரந்தரமாக வசிப்பது மகாராஜபுரம் என்றால் சரிதான். எனது அக்கா மல்லிகா தஞ்சாவூரில் எங்கு உள்ளார் என்றால் அவர் தஞ்சாவூரில் இல்லை. மல்லிகா மற்றும் ஜெயலட்சுமி பந்தநல்லூரில் எங்கு வசிக்கிறார்கள் என்றால் அம்மா வீட்டில் வசித்து

வருகிறார்கள். எனது மற்றும் மல்லிகாவின் ஆதார் ஆவணங்களை பார்த்தால் அவர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்ற உண்மை விவரம் தெரியும் என்றால் சரிதான்.

3. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு படித்துள்ளேன். யார் சொல்லி எனது அம்மா இவ்வழக்கினை தாக்கல் செய்தார் என்றால் யாரும் சொல்லவில்லை. அவர் யார் சொல்லி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்பதை எனது அம்மாவிடம் கேட்டால் தெரியும் என்றால் சரிதான். எனது அம்மா படிக்கவில்லை. வழக்குரையில் கூறப்பட்டுள்ள விவரங்களை யார் சொல்லி எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது அம்மா சொன்னார். பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தூரத்து சொந்தம் ஆவார்.

4. எனது பெற்றோர்கள் மற்றும் எனது தாத்தா , பாட்டிக்கு பிரதிவாதி என்ன சொந்தம் என்று தெரியுமா என்றால் எனது அப்பாவிற்கு பெரியப்பா பேத்தி ஆவார். எனது பாட்டி காசியம்மாளின் அக்கா யாரென்று தெரியுமா என்றால் சரஸ்வதி அம்மாள். சரஸ்வதி அம்மாள் பிரதிவாதிக்கு என்ன உறவுமுறை என்றால் பாட்டி ஆவார். வழக்குரையில் சொல்லப்பட்ட விவரங்களை யார் சொன்னது என்பதை எனது தாயாரை கேட்டால் தெரிய வரும் என்றால் சரிதான். வழக்குரை ஆங்கிலத்தில் உள்ளதா அதனை படித்து காட்டி எனது தாயார் புரிந்து கொண்டாரா என்பதை எனது தாயாரை கேட்டால் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

5. எனது நிரூபண வாக்குமூலத்தில் முதல் பாராவில் சொத்தின் அளவுகள் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் சொத்தின் விஸ்தீரணம் 12 செண்ட் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 12 செண்ட் என்று யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் பத்திரத்தை பார்த்து எழுதப்பட்டது. தாவா சொத்து என்ன அளவுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். அது 12 செண்ட்

விஸ்தீரணம் ஆகும். எந்த பத்திரத்தை பார்த்து எழுதப்பட்டது என்றால் வீட்டு பத்திரத்தை பார்த்து எழுதப்பட்டது. அந்த பத்திரம் யாரிடமிருந்து யாரால் வாங்கப்பட்டது என்றால் எனது பாட்டி காசியம்மாள் சரஸ்வதி அம்மாளிடமிருந்து எழுதி வாங்கியுள்ளார்.

6. மேற்படி ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள பட்டா எண் எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் நான் பட்டாவை பார்த்துள்ளேன். பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு பட்டா எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது அம்மாவை தான் கேட்க வேண்டும். அந்த பட்டா எனது குடும்பத்தினர் பெயரிலோ, எனது அப்பா பெயரிலோ இல்லை என்றால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தின் சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் பத்திரத்தை பார்த்து குறிப்பிட்டுள்ளேன்.

7. காசியம்மாளின் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ரங்கநாதனையும் சேர்த்து காசியம்மாளுக்கு 7 நபர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சரஸ்வதி அம்மாளும், காசியம்மாளும் சகோதரிகள் என்றால் அது எனக்கு தெரியாது. எனது அம்மாவை கேட்டால் தெரியுமா என்றால் தெரியும். வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ தாவா சொத்து எங்களுக்கு எவ்வாறு கிடைத்தது என்று சொல்லப்படவில்லை என்றாலும், அதற்கான எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

8. சரஸ்வதி அம்மாளின் மகன் யாரென்று தெரியுமா என்றால் தெரியும் அவரது

ஒரே மகன் பெயர் வைத்தியநாத பத்தர். வைத்தியநாதனின் ஒரே மகள் யாரென்றால் பிரதிவாதி கோமதி ஆவார். சரஸ்வதி அம்மாள் நீதிமன்றத்தில் ஏலம் எடுத்த சொத்தில் பாதி சொத்தை காசியம்மாளிடம் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனது அம்மாவிடம் தான் கேட்கவேண்டும். சரஸ்வதி அம்மாள் முழு சொத்தையும் காசியம்மாளிடம் விற்றுவிட்டார் என்று நான் சொல்கிறேனா என்றால் ஆமாம். சரஸ்வதி அம்மாள் என்ன அளவுள்ள சொத்தினை வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சரஸ்வதி அம்மாள் விலைக்கு வாங்கிய ஆவணத்தை பார்த்தால் அவர் என்ன அளவுள்ள சொத்தினை வாங்கினார் என்பது தெரியும் என்றால் சரிதான்.

9. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் சரஸ்வதி அம்மாள் கிரையம் வாங்கிய ஆவணம் என்றால் எனக்கு அதில் எழுத்து புரியவில்லை. வா.சா.ஆ-1 ஆவணம் என்ன ஆவணம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதிலுள்ள எழுத்து தான் புரியவில்லை. வா.சா.ஆ-1 ஆவணம் யார் மூலமாக வாங்கப்பட்டது என்றால் கணேசன் என்பவர் மூலமாக வாங்கப்பட்டுள்ளது. அவரும் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

/sd/N.Sivapalani/
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.